# TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்

## TNEB EMPLOYEES' FEDERATION NEWS

Volume - 6 Issue - 7 February 2024 | Monthly Magazine | Bilingual | Price - Rs.10/-

மலர் - 6 இதழ் - 7 பிப்ரவரி 2024 | மாத இதழ் | Tamil & English | விலை ரூ. 10/-

ஆசிரியர் : அ.சேக்கிழார்




**13.02.24 அன்று தமிழகம் முழுவதும் முத்தரப்பு ஒப்பந்தத்தை எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டக் காட்சிகள்**







**தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் வெளியீடு**




















**13.02.24 அன்று தமிழகம் முழுவதும் முத்தரப்பு ஒப்பந்தத்தை எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டக் காட்சிகள்**









**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 6 ✧ இதழ்-7 ✧ பிப்ரவரி 2024

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**

தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org

# முத்தரப்பு ஒப்பந்தம் - காலம் பதில் சொல்லும்!!!

வணக்கம் தோழர்களே!

**தை**ப் பிறந்தால் வழிபிறக்குமென்ற சொல்லுக்குப் பதிலாய் தை முடியும் முன்னரே பழியும் வந்து சேர்ந்தது என்றே கூறலாம்.

கடைசி முகூர்த்தத்தில் திருமணங்கள்தான் அதிகமாக நடக்கும். ஆனால், தை கடைசி நாளாவது கையெழுத்து பெற்றிட வேண்டுமென கங்கணம் கட்டிக் கொண்டு காரியத்தை சாதித்துள்ளனர்.

3.02.2024ல் முன் வரைவு தந்து 7ம் தேதி கருத்துக் கேட்டதால் 15 நாட்கள் அவகாசம் கேட்டோம். ஆனால், 9.2.2024ல் மீண்டும் அழைப்பு 12ம் தேதி ஒப்பந்தமென! 10, 11 சனி, ஞாயிறு இரு நாட்கள் விடுமுறை ஒரு பக்கம், 12ம் தேதி சட்ட சபை தொடக்கம் ஒரு பக்கம்! இப்படியாக முத்தரப்பு ஒப்பந்தம் முடிவாகியிருக்கிறது. 2010க்கு முன்னர் உள்ள தொழிலாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்குதான் ஒப்பந்தம் என்பதை, ஒப்பந்த தேதி வரை உண்டு என்பது உட்பட ஒரு சில தட்டச்சு பிழைகளை சரிபடுத்தியதுதான் மிச்சம் என்கிற நிலையில் ஏனைய திருத்தங்களுக்கு செவிசாய்க்கும் நிலையில் வாரியம் இல்லை!

TANGEDCOவைத் தொடர்ந்து அடுத்தது வரும் வாரிசு நிறுவனங்கள் ஏற்கனவே பெற்றும் உரிமைகள் சலுகைகள் யாவும் தரும், தராவிட்டால் அரசு தலையிடும் என்ற வார்த்தை சொல் அளவிற்கு உள்ளதை அரசு தரும் என உத்திரவாதம் தந்திட என்ன தயக்கமோ தெரியவில்லை!

உழைத்தவர்களுக்கும், உழைத்துக் கொண்டிருப்பவர்களும், நாளை உழைக்க வருபவர்களுக்கும் எங்கும் எதிலும் உத்திரவாதம் இல்லாத வெற்று காகிதத்திற்கு இணையான ஒப்பந்த நகல் என்பதை பலவாறாக நாம் வெளிப்படுத்தினோம், தொழிலாளர் மத்தியில் விழிப்புணர்வு செய்தோம். ஆனால், வாரியமோ எள்ளளவும் கண்டு கொள்ளாமல் கையெழுத்திட அழைத்து பெற்றுள்ளது!

தொழிலும், தொழிலாளர்களும் இரு கண்ணாக எண்ணும் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் கையொப்பமிடாமல் விலகி நின்றிருக்கிறது. கையை வெட்டிக் கொண்டு புண்ணுக்கு மருந்திடும் எண்ணம் நமக்கில்லை என்பதை புரிய வைத்துள்ளோம். ஆகவே, ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் விலகி நின்றுள்ளோம்.

தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்கம் (TNEBREOS) நம்முடன் இணைப்பு (Affliation) வைத்துள்ளதால் ஒப்பந்தத்திற்கு சேர்க்கவில்லையா!? காரணம் ஓய்வு பெற்ற சங்கங்களின் எண்ணிக்கை கூடிவிட்டதாம்! அகவிலைப்படி உயர்வின்போது மண்டியிடாமல் சண்டையிட்டதால் உத்தரவுகள் அனுப்பிட பட்டியலில் சேர்த்தார்களாம். ஆனால், பேச்சுவார்த்தைக்கு பட்டியலில் சேர்க்க முடியாதாம்! சாதம் போடுவார்களாம்! சாம்பார் ஊற்றமாட்டார்களாம்! என்ன விந்தை இது!? இதற்கு எத்தனை கோப்பு! ஒப்புதல் என அங்கலாய்ப்பு!

புலி பசித்தாலும் புல்லை திண்ணாது! இந்த புத்திசாலித்தனம் எம்மிடம் செல்லாது!

களத்தில் சந்தித்தால் பலத்தை நிரூபிப்போம்! தளத்தில் சந்தித்தால் வளத்தை வெளிப்படுத்துவோம்! நிலத்தைப் பார்த்து நிற்கும் நிலையில்லை - என்றும் நேர்கொண்ட பார்வை!

***- ஆசிரியர்***

# 16.02.2024 அகில இந்திய வேலை நிறுத்தம் அறிவிப்பு

நாள் : 01.02.2024

1958-ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகள்
விதி 59(1)-ன் கீழ்
படிவம் ''ஓ''
**(Form "O")**

## பொதுப் பயன் துறையில் வேலை நிறுத்தம் செய்வதற்காக தொழிற் சங்கத்தால் வழங்கப்படுகின்ற வேலை நிறுத்த அறிவிப்பு படிவம்

| | | |
|---|---|---|
| தொழிற்சங்கத்தின் பெயர் | : | **தமிழ்நாடு எலக்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் (Tamilnadu Electricity Board Employees Federation)** |
| வேலை நிறுத்த அறிக்கை தர தொழிலாளர்களால் அதிகாரம் பெற்றுள்ள ஏழு பிரதிநிதிகள் | | |

| | | |
|---|---|---|
| 1. | **A. சேக்கிழார்** | பொதுச்செயலாளர் |
| 2. | **A. அருணாசலம்** | மாநில உப தலைவர் |
| 3. | **K. நாராயணமூர்த்தி** | அமைப்புச் செயலாளர் |
| 4. | **R.G. லெனின் சீனிவாசன்** | மாநில செயலாளர் |
| 5. | **N. பழனி** | மாநில செயலாளர் |
| 6. | **S. சக்திவேல்** | மாநில செயலாளர் |
| 7. | **K. சம்பத்** | மாநில இணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| முகவரி | : | 39/101, சிங்கண்ண தெரு,<br>சிந்தாதிரிப்பேட்டை,<br>சென்னை - 600 002. |
| வேலை நிறுத்த அறிவிப்பு தரும் நாள் | : | 01.02.2024 |
| பெறுநர் (நிர்வாகம்) | : | செயலாளர்<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்<br>144, அண்ணாசாலை |

ஐயா,

1947ம் ஆண்டு தொழிற் தகராறு சட்டப்பிரிவு 22(1)ன் படி வேலை நிறுத்த அறிவிப்பினை இதன் மூலம் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். சட்டப்பிரிவு 22(1)ன்படி (வேலை நிறுத்தம்) **2024 பிப்ரவரி 16ம் நாள் வெள்ளிக்கிழமை** ஒரு நாள் **வேலை நிறுத்தம் 16.02.2024 காலை 6.00 மணி முதல் 17.02.2024 காலை 6.00 மணி** வரையில் 24 மணி நேரம் நடைபெறும்.

1958ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகளில் விதிஎண் 59-ன் கீழ் வேலை நிறுத்தத்திற்கு தேவைப்படுகின்ற அடிப்படையான விவரங்கள் அடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தங்கள் உண்மையுள்ள

**தொழிற்சங்கம் அளித்துள்ள அதிகாரத்தின்படி**
**தொழிற்சங்க ஏழு பிரதிநிதிகளின் கையொப்பம்**

| | | |
|---|---|---|
| 1. | **A. சேக்கிழார்** | பொதுச்செயலாளர் |
| 2. | **A. அருணாசலம்** | மாநில உப தலைவர் |
| 3. | **K. நாராயணமூர்த்தி** | மாநில அமைப்பு செயலாளர் |
| 4. | **R.G. லெனின் சீனிவாசன்** | மாநில செயலாளர் |
| 5. | **N. பழனி** | மாநில செயலாளர் |
| 6. | **S. சக்திவேல்** | மாநில செயலாளர் |
| 7. | **K. சம்பத்** | மாநில இணைச் செயலாளர் |

**பெறுநர் :**

1. **செயலாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்,** 800, அண்ணாசாலை, சென்னை - 600 002.
2. **செயலாளர், தொழிலாளர் துறை,** தமிழ்நாடு அரசு, சென்னை - 600 009.
3. **தொழிலாளர் ஆணையர்,** தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

**இணைப்பு :**

வேலை நிறுத்தத்திற்கு அடிப்படையான கோரிக்கை பட்டியல்.

## இணைப்பு

(1958-ம் ஆண்டு தொழிற் தகராறு விதிகளில் எண் 59-ன் கீழ்)

| | | |
|---|---|---|
| **(அ) தொழிற் தகராறுகளுக்கான கட்சிக்காரர்கள்** | : | 1) தொழிலாளர் தரப்பு<br>பொதுச் செயலாளர்<br>தமிழ்நாடு எலக்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்,<br>39/101, சிங்கண்ண தெரு, சிந்தாரிப்பேட்டை, சென்னை-2. |
| | : | 2) நிர்வாகத் தரப்பு<br>செயலாளர்<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்<br>144, அண்ணாசாலை, சென்னை-600 002. |
| **(ஆ) தொழிற் தகராறுகளின் தன்மை மற்றும் கோரிக்கைகள்** | : | கோரிக்கைகள் இணைக்கப்பட்டுள்ளது. |
| **(இ) பாதிக்கப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை** | : | இந்திய தேசத்தில் மின்சாரத் தொழிலாளர்கள் 10 லட்சத்திற்கு மேற்பட்டோர், குறிப்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சுமார் 90,000 மேற்பட்ட நிரந்தர தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் 10,000-த்திற்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் 5,000-த்திற்கும் மேற்பட்ட பகுதி நேர பணியாளர்கள் மற்றும் லட்சத்திற்கு உட்பட்ட மின்சார வாரிய ஓய்வூதியர்கள், தமிழ்நாட்டிலுள்ள சுமார் 3 கோடிக்கு மேலான மின் நுகர்வோர்கள் ஆகியோர்கள் நேரடியாக பாதிக்கப்படுகின்றனர். |
| **(ஈ) தொழில் தகராறுகளை தீர்ப்பதற்கு எடுத்து கொண்ட முயற்சிகள்** | : | 1. மத்திய அரசின் கொள்கைகளினால் மின்சார வாரியங்கள் உட்பட அனைத்து பொதுத் துறை நிறுவனங்களில் காலியிடங்களை நிரப்பிடாமல் வேலை வாய்ப்பினை குறைப்பது, தொழிலாளர்களுக்குள்ள சலுகைகளை குறைப்பது, நிரந்தரப் பணியிடங்களில் அவுட்சோர்சிங் முறையில் பணியமர்த்துவது, நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்பது, அத்தியாவசிய பொருள்களின் |

விலைவாசி ஏற்றம் போன்ற பிரச்சனைகளை தீர்ப்பதற்காக தேசம் தழுவிய அளவில் மத்திய தொழிற்சங்கங்களின் அறைகூவலுக்கு இணங்க ஆர்ப்பாட்டம், பேரணி, உண்ணா விரதம் என பல கட்ட முறைகளில் மத்திய அரசின் கவனத்தை ஈர்த்து தீர்வு கண்டிட முயற்சித்ததும், வங்கி, ஆயுள் காப்பீட்டு நிறுவனம், தொலைபேசி, போக்குவரத்து மற்றும் மின்சாரம் போன்றவைகளில் பெருமளவிற்கு தனியார் முதலீடு உள்புகுந்திருப்பதையும், பழைய ஓய்வூதியம் 1.4.2003 முதல் மறுக்கப்பட்டிருப்பதையும், மின்சார சட்ட திருத்தத்தை மின்சார வாரியங்களில் அமுலுக்கு கொண்டு வர முயற்சிப்பது போன்ற செயல்களை தடுத்திட தொழிற்சங்க இயக்கங்கள் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

2. மின்சார சட்ட திருத்தம் 2022ஐ அமுல்படுத்துவதற்கு எதிராகவும் மேற்கண்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும் தேசிய அளவிலான மின்சாரத் தொழிலாளர் மற்றும் பொறியாளர் ஒருங்கிணைப்புக்குழு (NCCOEE) சார்பாகவும் போராட்டங்கள் பல நடத்தியும் மேலே குறிப்பிட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பாக மத்திய தொழிற்சங்கங்களும் மத்திய அரசினை வலியுறுத்தி அகில இந்திய அளவில் பல்வேறு போராட்டங்களை நடத்தியதை தொடர்ந்து தீர்வு காணப்படாததால் 19.01.2024 மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டு அறிவிப்பின்படி 2024 பிப்ரவரி 16ம் நாள் வெள்ளிக்கிழமை ஒரு நாள் 24 மணி நேர வேலை நிறுத்தத்தை முன் நிறுத்துகிறோம்.

பொதுச் செயலாளர்

## கோரிக்கைகள்

**1958ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகளில், விதி 59ன் கீழ் தொழிற்சங்கம் நடத்தவுள்ள வேலை நிறுத்தத்திற்கு அடிப்படையான கோரிக்கைகள் அடங்கிய விபரப் பட்டியல்**

1) BP2ஐ முழுமையாக ரத்து செய்திட வேண்டும்.

2) 1.12.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வுக்கான 16.05.2023 ஒப்பந்தத்தில் 6% ஊதிய உயர்வு மறுக்கப்பட்ட 12,000 தொழிலாளர்களுக்கு வழங்கிடல் வேண்டும்.

3) பதவிகளை குறைப்பதும், காலியிடங்களை ஒழிப்பதும், அவுட்சோர்சிங் செய்திட Redeployment உத்திரவிடுவது போன்ற செயல்களை நிறுத்திடல் வேண்டும்.

4) காலியிடங்கள் Field Assistant, Technical Assistant, Assessor, Junior Assistant, Assistant Engineer, Assistant Draughtsman ஆகிய பதவிகள் சுமார் 56,000 காலியிடங்களை நிரப்பிடல் வேண்டும்.

5) புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியமே தொடர வேண்டும்.

6) 10,000க்கு மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் தொடர்ந்து பணி செய்து வருகிறார். தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிரந்தரம் செய்திட வேண்டும்.

7) 1000 அலுவலகங்களுக்கு மேல் பகுதி நேரப் பணியாளர்கள் இல்லாத நிலை உள்ளது. ஊதியமின்றி பணி செய்து கொண்டிருப்பவர்களை நிரந்தரம் செய்திடல் வேண்டும்.

8) தமிழ்நாடு மின்சார வாரியம் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிட வேண்டும்.

9) மின்சார சட்டம் 2003ன் தொடர்ச்சியாக வரும் மின்சார சட்ட திருத்தத்தை கைவிட வேண்டும்.

10) தனியார் மயப்படுத்துவதற்காக மின் விநியோகத்தையும், உற்பத்தியையும் தனியாரிடம் தாரை வார்ப்பதை நிறுத்த வேண்டும்.

11) மின் விநியோகம், உற்பத்தி போன்றவைகளில் தனியாருக்கு தந்துள்ள அனுமதி மற்றும் உரிமத்தை அனைத்து மாநிலங்களிலும் ரத்து செய்திட வேண்டும்.

12) மின்சார வாரியம் உட்பட அனைத்து பொதுத்துறைகளிலும் உள்ள காலி இடங்களையும் நிரப்பிட வேண்டும். பணியிடங்கள் அனைத்திலும் நிரந்தர தொழிலாளர்களே பணி செய்திட வேண்டும்.

13) அதிக விலைக்கு தனியாரிடம் மின் கொள்முதல் செய்வதை கைவிடல் வேண்டும்.

14) பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை விற்று தனியார் மயமாக்குவதை நிறுத்திடல் வேண்டும்.

15) தொழிலாளர் நல சட்டங்கள் 44ஐ நான்கு சட்ட தொகுப்புகளாக மாற்றியதை திரும்ப பெற வேண்டும்.

16) அத்தியாவசிய பொருள்களின் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும்.

17) கல்வி, சுகாதாரம், தண்ணீர் போன்ற அடிப்படையானவைகளை தனியார் மயமாக்குதலை நிறுத்திடல் வேண்டும்.

18) சமவேலைக்கு சம ஊதியம் வழங்க குறைந்தபட்ச ஊதியம் 26,000/- நிர்ணயித்திடல் வேண்டும்.

பொதுச் செயலாளர்

## 16.02.2024 வேலை நிறுத்த அறிவிப்பு - சமரச பேச்சுவார்த்தை

அனுப்புநர்

**திரு. V.G. ரமேஷ்குமார், B.E., BGL.,**
தொழிலாளர் துணை ஆணையர்
(தலைமையிடம்),
தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,
5வது தளம், தேனாம்பேட்டை,
சென்னை-600 006.

பெறுநர்

**செயலாளர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை-600 002.

**தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்,**
எண். 39/101, சிங்கண்ண தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600 002.

மற்றும் வேலை நிறுத்த அறிவிக்கை கொடுத்த இதர தொழிற்சங்கங்கள்

**கடித எண். ப2/3542/2024, நாள்: 07.02.2024**

அய்யா,

பொருள் : **வேலை நிறுத்தம் - நிர்வாகம் - தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம் - எதிர் - தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் - பொதுத்துறை நிறுவனங்கள், மின்வாரியம் உள்ளிட்ட அரசுத் துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்குவரை கைவிட வேண்டும். மின்சார சட்ட திருத்த மசோதா 2022 திரும்ப பெறவேண்டும். புதிய ஓய்வூதியத் திட்டத்தை கைவிட வேண்டும் உள்ளிட்ட சில கோரிக்கைகளை வலியுறுத்தி *16.02.2024* காலை 6 மணி முதல் *17.02.2024* காலை 6 மணி வரை வேலைநிறுத்தம் செய்வதாக அறிவிப்பு பெறப்பட்டது - தொடர்பாக.**

பார்வை :
1) **தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு என்ற தொழிற்சங்கத்தின் வேலைநிறுத்த அறிவிப்பு கடிதம் நாள்: *01.02.2024***
2) **தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம் என்ற தொழிற்சங்கத்தின் வேலைநிறுத்த அறிவிப்பு கடிதம் நாள்: *01.02.2024***
3) **தமிழ்நாடு எலெக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன் என்ற தொழிற்சங்கத்தின் வேலைநிறுத்த அறிவிப்பு கடிதம் நாள்: *01.02.2024***
4) **தமிழ்நாடு பவர் இன்ஜினியர்ஸ் ஆர்கனைசேஷன் என்ற தொழிற்சங்கத்தின் வேலைநிறுத்த அறிவிப்பு கடிதம் நாள்: *01.02.2024***
5) **தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் என்ற தொழிற்சங்கத்தின் வேலைநிறுத்த அறிவிப்பு கடிதம் நாள்: *29.01.2024***
6) **தமிழ்நாடு நேஷனல் எலெக்ட்ரிசிட்டி ஒர்க்கர்ஸ் பெடரேசன் என்ற தொழிற்சங்கத்தின் வேலைநிறுத்த அறிவிப்பு கடிதம் நாள்: *01.02.2024***
7) **தமிழ்நாடு மின்சார வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம் என்ற தொழிற்சங்கத்தின் வேலை நிறுத்த அறிவிப்பு கடிதம் நாள்: *01.02.2024***

பார்வையில் காணும் 7 தொழிற்சங்கங்கள், மின்வாரிய ஊழியர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் பொதுத்துறை நிறுவனங்கள், மின்வாரியம் உள்ளிட்ட அரசுத் துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்குவதை கைவிட வேண்டும். மின்சார சட்டதிருத்த மசோதா 2022 திரும்ப பெற வேண்டும். புதிய ஓய்வூதியத் திட்டத்தை கைவிட வேண்டும் உள்ளிட்ட சில கோரிக்கைகளை வலியுறுத்தி 16.02.2024 காலை 6 மணி முதல் 17.02.2024 காலை 6 மணி வரை வேலைநிறுத்தம் செய்வதாக அறிவிப்பு வழங்கியுள்ளது. இதுகுறித்து தொழிலாளர் துணை ஆணையர் (தலைமையிடம்) முன்னிலையில், 14.02.2024 அன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெற உள்ள பேச்சுவார்த்தைக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் இருதரப்பினரும் தவறாது ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், வேலை நிறுத்தம் போன்ற நேரடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என்றும், பொது அமைதி காத்திடுமாறும், சமரச பேச்சுவார்த்தையில் சுமுக முடிவை எதிர்நோக்குமாறும் தொழிற்சங்கத்திற்கு அறிவுறுத்தப்படுகிறது.

தொழிலாளர்களின் பணிநிலைமைகளில் எவ்வித மாற்றமும் செய்யாமல் "Status-Quo" நிலையை கடைபிடிக்குமாறு நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஒப்பம்
**தொழிலாளர் துணை ஆணையர்**
(தலைமையிடம்)



## பதவி உயர்வில் பணி சிறக்க வாழ்த்துகிறோம்

**திருமதி. K. தனபாக்கியம், B.Com.,**

கணக்கு மேற்பார்வையாளரிலிருந்து உதவி கணக்கு அலுவலராக பதவி உயர்வு பெற்று கோவை தெற்கு வட்டத்தில் பணியேற்றமைக்கு மகிழ்வோடு வளர்ச்சி நிதி ரூ. 5,000/- வழங்கியுள்ளார்கள்.

**- ஆசிரியர்**

## பதவி உயர்வில் பணி சிறக்க வாழ்த்துகிறோம்

07-12-2023 அன்று திரு. A. கருப்பன் கணக்கீட்டு ஆய்வாளர் வேலகவுண்டம் பட்டி பிரிவு அவர்கள் பதவி உயர்வில் வருவாய் மேற்பார்வையாளராக வேலகவுண்டம்பட்டி பிரிவில் பணியேற்பு செய்தமைக்கு TNEB EMPLOYEES FEDERATION நாமக்கல் திட்ட கிளை சார்பாக வாழ்த்து தெரிவித்தபோது வளர்ச்சி நிதியாக ரூ. 3000/- வழங்கினார்.

**- ஆசிரியர்**

# மின்வாரிய சீரமைப்பிற்கான வாரியத் தரப்பு முன்வரைவு

**Administrative Branch**
N.P.K.R.R. Maaligai,
144, Anna Salai,
Chennai - 02.

**Letter No. 11989/A16/A161/2021-13, Dated : 03.02.2024**

From

**Thiru. Rajesh Lokhoni,** I.A.S.,
Additional Chief Secretary,
Chairman-cum-Managing Director

To

The General Secretary, (w.e.)
Tamil Nadu Electricity Board Employees Federation and 17 Union / 8 Pensioners Association

Sir,

***Sub :*** ***TANGEDCO - Restructuring of erstwhile TNEB - Furnishing of Draft Tripartite Agreement - Views of Unions/Association - Called for arriving at an amicable Agreement - Regarding.***

***Ref :***
1. ***G.O. (Ms). No. 100 Energy (B2) Dept, dated 19.10.2010***
2. ***From Energy (B2) Department, Secretariat, Chennai Letter (Ms) No. 96/2023, dated 31.10.2023***
3. ***G.O. (Ms) No. 102 Energy (B2) Department, Secretariat, dated 23.11.2023.***

I am to state that as already discussed with the Unions/Associations, in the matter of Tripartite Agreement to be entered into and taking consideration of the views expressed by them, the Government was addressed with the draft tripartite agreement. After careful consideration, the Government had approved the draft Tripartite Agreement with certain modifications in respect of clauses 5(3), 5(7), 5(9), 5(10), 5(12), 5(16), 5(21) & 5(22). The same has also been considered and accordingly the revised draft Tripartite Agreement is enclosed herewith to this letter, for offering your views and consent on or before 7th February 2024 positively for arriving at an amicable agreement.

Yours faithfully,
**(A. JEEYABUDEEN AHAMED BABU)**
Under Secretary/Wage Revision
and Regulations
for Chairman-cum-Managing Director
TANGEDCO

**DRAFT TRIPARTITE AGREEMENT**
**BETWEEN**
**THE GOVERNMENT OF TAMIL NADU, TNEB Limited, TANTRANSCO, TANGEDCO AND ALI RECOGNISED TRADE UNIONS AND ASSOCIATIONS REPRESENTING OFFICERS/EMPLOYEES - PENSIONERS.**

This Tripartite Agreement entered into at Chennal on this. ....th day of......... 2024 between the Government of Tamil Nadu represented by its Principal Secretary to Government, Energy Department, (hereinafter called as the "State Government"), and the Party of the FIRST PART;

And

(1) The TNEB Limited. (2) the Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO) and (3) the Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) company and corporations wholly owned by the Government of Tamil Nadu and incorporated under the Companies Act, 1956 (1 of 1955), (hereinafter collectively called as "Successor entities") which expression shall unless repugnant to the context or meaning thereof include its successors and assigns, represented by its Chairman and The Parties of the SECOND PART;

And

All the recognized Trade unions and Associations representing Officers/employees and Pensioners of TNEB (covered under Per.B.P.(Ch) No.247 (SB) Dated 17.10.2007) (hereinafter called as "Union/Association") represented by the respective General Secretary/President or any other authorized representative, as the case may be, as shown herein under and the Parties of the THIRD PART;

**WHEREAS**

1. The Government of Tamil Nadu, in G.O. (Ms) No.114 Energy (82) Dept, dated 08.10.2008, have accorded in-principle approval for the re&organization of the Board by establishing a holding company, namely, TNEB Limited and two subsidiary companies namely, Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO) and Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) with the stipulation that the aforementioned companies shall be wholly owned by the Government of Tamil Nadu;
2. The Officers/Employees of the Board may be apprehensive that on such reorganization of the Board they may be retrenched and/or their service. conditions may be adversely affected or their services may be privatized.
3. The Government of Tamil Nadu have clearly stated that such apprehensions of Officers/ Employees are unfounded.
4. For the purpose of smooth implementation of the policy of re&organization and restructuring of the Board and consequent absorption of the Officers/ employees in successor entities as also to dispel the apprehensions that are being raised by the Trade Unions and Associations mentioned in Clause 2 above, the parties herein mutually agree as under and undertake to abide by the same to achieve the aforesaid objective;

5. Now, therefore, in consideration of the premises, mutual agreements, Covenants and conditions set forth herein, it is agreed by and between the parties as follows:-

(1) In so far as this Tripartite Agreement is concerned;
   (a) 'State Government' means 'Government of Tamil Nadu;
   (b) 'Board' means the Tamil Nadu Electricity Board
   (c) Existing Officers/ Employees' means Officers/ Employees of the Board as on the preceding date of the first day of November 2010;
   (d) 'Holding Company' means the TNEB Limited;
   (e) 'Successor entities' or 'Corporate entities' means 'TNEB Limited', TANTRANSCO and 'TANGEDCO';
   (f) 'Subsidiary Companies' means, TANGEDCO and TANTRANSCO.

(2) All other words and expressions used herein and not defined shall have the meanings respectively assigned to them as stated in the G.O.(Ms) No:100, Energy department, dt: 19.10.2010.

(3) In view of re&organization of the Board into TNEB Limited (as holding company) and two or as many subsidiary companies like Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO) and Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) as a separate Corporate entities, the State Government and the Successor entities hereby undertake that there shall be no retrenchment of existing Officers/Employees on account of such restructuring and their status / service conditions shall not in any way be less favourable than those which would have been applicable to them if there had been no such re-organization and the transfer scheme. Any employee rendered surplus through a mutually agreed process of appropriate rationalization shall be redeployed.

(4) The terms and conditions of service of the existing Officers/Employees of the Board upon transfer to the Successor/Corporate entities shall not be inferior to the present terms and conditions of service in the Board. The Successor entities will endeavor to rationalize the terms and conditions to provide for career growth and other welfare measures more beneficial to the Officers/ Employees recognizing that the Officers/Employees are an essential part of the growth of power sector and its operation in an economic and efficient manner

(5) The principies and / or terms and conditions of service of the existing Officers/Employees in matters like promotions, appointments, internal selections, transfers, leave, all allowances, etc., regulated by existing regulations / ratios / service rules are guaranteed to continue to be the same during transition and shall not be less favourable as stated upon permanent transfer to the respective successor entities of the Board.

(6) The existing wage settlement and work load settlement entered with the Unions/ Associations shall be valid with full force and effective even after re&organization until its validity period or a new settlement is arrived at, whichever is later. With regard to pay revision, the present system of bipartite negotiations shall continue by the Trade Unions / Associations with the respective successor entities, under the aegis of TNEB Limited. The successor entities of TINEB shall enter into all future wage settlements with the Unions/Associations.

(7) The parties of the first and second part shall guarantee the payment of Pension, Family Pension, Retirement / Death benefits such as gratuity, encashment of earned leave and the existing benefits inclucing GPF/CPF and periodical Dearness Allowance Relief and all other terminal/applicable benefits that are in force as on the date of signing of this agreement to all existing pensioners / family pensioners / other eligible persons..

(8) In so far as all the Retirement and terminal benefits of existing Officers/ Employees are concerned appropriate arrangements shall be made to ensure that the interests of the Officers/Employees, are protected. Till arrangements are finalized, all such payments to the existing Officers/ Employees working on "as-is where-is" condition shall continue as per the present arrangements.

(9) It is agreed by the Parties of First and Second Part herein to consider creation of a separate fund to meet the Pension and other liabilities to the existing pensioners and pension and other terminal benefits of the existing Officers/Employees of the TNEB and the successor entities.

(10) All the existing welfare measures like the scheme for compassionate appointment, medical reimbursement, present medical insurance till its validity period and thereafter by any other suitable scheme / insurance, educational loan, health fund, HBA, Conveyance advance, marriage advance, festival advance or any other existing loans and advances shall be continued. For introduction of new schemes/benefits/ welfare measures, prior approval of Government have to be obtained after placing the issue before the respective Board.

(11) In respect of all the statutory and other schemes such as Provident Fund, Gratuity and other superannuation benefits of the Officers/Employees and matters related to employment, the successor entities shall stand substituted for all purposes of nights, powers, and obligations of the Board / entities.

(12) The existing welfare benefits to the pensioners, family pensioners, ex-gratia pensioners and existing Officers/Employees subject to modifications, that may be brought forth by the State Government, shall continue subject to the approval of the respective Company's Board. All obligations in respect of payment of pension, family pension and other retirement benefits including provident fund, superannuation pension, gratuity and encashment of leave, etc., to the Officers/Employees already retired and to be retired from the services of the Board shall continue. For introduction of new schemes/ benefits/welfare measures, prior approval of Government have to be obtained after placing the issue before the respective Board.

(13) The period of service of the existing Officers/Employees under the Board and the successor entities shall be treated as continuous service for the purposes of all service benefits including promotion, internal selection, fixation, movement to selection grade, special grade, payment of pension etc., and retirement/terminal benefits.

(14) All benefits for the services rendered by the Officers/Employees in the Board as on the date of permanent transfer to successor entities, shall be protected.

(15) Even on formation of TNEB LIMITED, TANTRANSCO and TANGEDCO, until further orders, all the existing Officers/Employees of the Board will be retained in TANGEDCO for the present. The Officers/Employees shall continue to serve "as-is where-is" basis and shall be treated as Officers/ Employees of TANGEDCO and they would be treated as being on deputation to the other successor entities. The period of transition will be as approved by Government of Tamil Nadu in Transfer Scheme in the Government of Tamil Nadu gazette. During the transition period, Ie., till the period of finalization of options of the Officers/Employees and their absorption in the successor entities, the cadre management shall vest with TANGEDCO. During such transition period the existing seniority pattern for each category will be maintained by TANGEDCO. The other entities shall accept the employee posted by TANGEDCO wherever necessary in consultation with the TANTRANSCO and TNEB Ltd., based on seniority which shall be basis for absorption of Officers/Employees in the successor entities. The service conditions of the employee in the successor entities shall not be less. favourable to them than that has been provided by the Board. Retirement/ Terminal benefits Including GPF/CPF and pension payments to the retiring Officers/employees during the period of transition shall be dealt with by TANGEDCO and thereafter by the successor entities.

(16) The Officers/Employees so transferred to the service of the successor entities shall be deemed to have entered into an agreement / settlement with such successor entities to fulfill the obligations undertaken by them to the Board including in respect of repayment of loans, advances and other sums due which remain outstanding from the Officers/ Employees on the date of transfer to the successor entity.

(17) All disciplinary proceedings pending on the date of transfer of an employee to the successor entity shall be dealt with by the respective successor entity following the existing rules, Regulations, Certified Standing order and all other instructions / orders in force. All disciplinary cases already finalized and or punishments awarded by the Board under the existing rules / regulations / certified standing orders etc., shall not be reopened, unless permitted by the rules / regulations.

(18) All the existing workload norms shall continue and changes from time to time shall be finalized through mutually negotiated settlements between the recognized Trade Unions and the respective successor entity.

(19) The rule of reservation hitherto followed by the Board shall be continued by the successor entilies and the successor entity shall follow the rule of reservation as orde ed by the State Government from time to time including any changes/modifications..

(20) If the newly constituted Corporate entity / entities fail to implement this agreement in any respect, the State Government shall take full responsibility for enforcing such implementation by the entity concerned.

(21) The successor entities may introduce a new set of rules, regulations, certified standing order, etc., in consultation with the Trade Unions and Board which will be effective from the date following the date of completion of transition period which shall be within the ambit of the first proviso to section 133 (2) of the Electricity Act 2003. Till such introduction,

the rules, regulations, certified standing orders, etc., in force on the date of this agreement shail continue to be in force. Even legitimate activity or functions of TNEB or successor entities in respect of existing Officers/Employees including those contained in the settlements on work norms shall not be modified without following the procedure laid down in relevant law.

(22) In the event of any dispute(s)/ difference(s) arising out of this Tripartite Agreement, effort shall be taken by the parties to resolve such dispute(s)/ difference(s) amicably in the first instance. If such dispute(s)/ difference(s) could not be resolved within 60 days, the respective parties including the present and past Officers/Employees shall be free to avail the remedies available under any law of the land.

(23) This Tripartite Agreement shall be binding on the Government of Tamil Nadu, Successor entities and Unions / Associations/Pensioners of the Board and all the existing and past Officers/employees of the Board. The first party, the Government of Tamil Nadu shall have power to issue orders / instructions / directions, if any from time to time to implement any of the provisions of this Tripartite Agreement and other related matters incidental thereto. In such case, it shall be the duty of other parties to this Tripartite agreement to treat the same as part and parcel of this Tripartite agreement, subject to the right under sub&clause (22) of clause 5 of this Tripartite agreement.

(24) The existing recognition of the Unions to be continued even after restructuring and binding on the successor entities.

(25) This Tripartite Agreement executed by and between the parties herein shall be duly notified in the Tamil Nadu Government Gazette.

(26) This tripartite agreement shall be deemed to have come into force with effect on and from the first day of November 2010.

IN WITNESS WHERE OF the parties hereto have signed this Tripartite Agreement on the day, month and year written here-in-above.

| | Witness | |
|---|---|---|
| The Principal Secretary to Government,<br>Energy Department, Chennai-600 009<br>Government of Tamil Nadu,<br>For and on behalf of the<br>Government of Tamil Nadu<br>**(The party of the FIRST PART)** | 1. | |
| | 2. | |
| The Additional Chief Secretary/<br>Chairman Managing Director,<br>For and on behalf of TNEB Ltd.,<br>TANGEDCO & TANTRANSCO<br>Chennai-600 002<br>**(The party of the SECOND PART)** | 1. | |
| | 2. | |

## மின்வாரிய சீரமைப்பு - வாரியத்தின் முன்வரைவின் மீது நமது கருத்துகள்

நாள் : 09.02.2024

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : தமிழ்நாடு மின்சார வாரியம் - மறுசீரமைப்பு - முத்தரப்பு ஒப்பந்தம் - கருத்து கேட்டுள்ளது தொடர்பாக.**

**பார்வை : 1. Letter No. 11989/A16/A161/2021-13 Dt. 03.02.2024**
**2. TNEBEF பொதுச் செயலாளர் கடிதம் நாள் : 07.02.2024**
**3. Letter No. 11989/A16/A161/2021-16 Dt. 08.02.2024**
**4. TNEBEF பொதுச் செயலாளர் கடிதம் நாள் : 02.02.2021**

பார்வையில் (1)ல் கண்டுள்ளபடி தமிழ்நாடு மின்சார வாரிய மறு சீரமைப்புகள் குறித்து அளிக்கப்பட்டுள்ள முத்தரப்பு ஒப்பந்தத்திற்கான முன்வரைவு வாரியத்தால் வழங்கப்பட்டதில் 7.12.2024க்குள் கருத்து கோரப்பட்டிருந்ததின் அடிப்படையில் பார்ரவை (2)ல் கண்டுள்ளபடி எங்களது கருத்துகளைத் தெரிவிக்க 15 நாட்கள் அவகாசம் கேட்டிருந்தோம்.

பார்வை (3)ல் கண்டுள்ளபடி 12.02.2024 அன்று முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு அழைத்துள்ள நிலையில் வாரியத்தால் தரப்பட்டுள்ள முன்வரைவின் மீது எங்கள் தரப்பு கருத்துகளை தெரிவிக்கின்றோம்.

முன் வரைவில்,

5 (1) (c) 'Existing Officers/ Employees' means Officers / Employees of the Board as on the preceding date of the first day of November 2010 என்பதை Date of Settlement என முத்தரப்பு ஒப்பந்தம் ஆகின்ற தேதி வரை பணியாற்றுபவர்கள் என மாற்ற வேண்டும்.

5 (1) (f) 'Subsidiary Companies' means, TANGEDCO and TANTRANSCO

TANGEDCO எஎன்பதை GO No. 6 dated 24.01.2024 மற்றும் GO No. 7 dated 24.01.2024 என்ற அரசாணைகளின் மூலம் Tamilnadu Power Distribution Corporation Ltd., Tamilnadu Power Generation Corporation Ltd.,, Tamilnadu Green Energy Corporation Ltd., என மூன்று கம்பெனிகளாக பிரிக்கப்பட்டு நடப்பு நிதியாண்டு முதல் அமுலுக்கு வரும் என உத்தரவிட்டிருப்பதும் மேற்கண்ட ஒப்பந்தத்தில் 2010ஆம் ஆண்டில் பிரிக்கப்பட்ட TANGEDCO என்ற பெயரில் ஒப்பந்தத்திற்கு குறிப்பிட்டப்பட்டிருப்பது முரணானதாகும். எனவே அரசாணைகளை ரத்து செய்ய வேண்டும்.

5 (7) The parties of the first and second part **unconditional guarantee** the payment of Pension, Family Pension, Retirement / Death benefits such as gratuity, encashment of earned leave and the existing benefits including GPF / CPF and periodical Dearness Allowance Relief and all other terminal / applicable benefits that are in force as on the date of signing of this agreement to all existing **employee** / pensioners / family pensioners / other eligible persons.

வாரியத்தால் அளிக்கப்பட்டுள்ள முன்வரைவில் 5 (7) மேற்கண்டவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

5 (10) All the existing welfare measures like the scheme for compassionate appointment, medical reimbursement, present medical insurance till its validity period and thereafter by any other suitable scheme / insurance, educational loan, health fund, HBA, Conveyance advance, marriage advance, festival advance or any other existing loans and advances shall be continued generally following the schemes introduced / followed by the State Government to the Government servant as has been done earlier.

வாரியத்தால் அளிக்கப்பட்டுள்ள முன்வரைவில் 5 (10) மேற்கண்டவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

5 (12) The benefits, which may be announced by the Government of Tamil Nadu to their pensioners from time to time, shall be implemented without any modifications by the "the successor corporate entities" as was hitherto done by the Board.

வாரியத்தால் அளிக்கப்பட்டுள்ள முன்வரைவில் 5 (12) மேற்கண்டவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

5 (20) If the newly constituted corporate entity / entities fail to implement this agreement in any respect, the State Government shall take full responsibility **for enforcing such implementation by the entity concerned.**

வாரியத்தால் அளிக்கப்பட்டுள்ள முன்வரைவில் 5 (20) அடிகோடிட்டுள்ளதை உள்ளதை நீக்கப்பட வேண்டும்.

5 (21) The sucessor entities may introduce a new set of rules, regulations, certified standing order etc, in consultation with the Trade Union and **Board** which will be effective from the date following the date of completion of transition period which shall be within the ambit of the first proviso to section 133 (2) of the Electricity Act 2003. Till such introduction, the rules, regulations, certified standing orders etc., in force on the date of this agreement shall continue to be in force. Even legitimate activity or functions of TNEB or Successor entities in respect of existing Officers / Employees including those contained in the settlements on work norms shall not be modified without following the procedure laid down in relevant law.

வாரியத்தால் அளிக்கப்பட்டுள்ள முன்வரைவில் 5 (21) அடிகோடிட்டுள்ள Board என்பற்கு பதிலாக TNEB Limited என மாற்றியமைக்க வேண்டும்.

5 (16) During the transition period, i.e., from deputation to permanent absorption, the existing Officers / employees of the Board shall be allowed to exercise their preferred option and in case of any grievances, a "grievance handling committee" shall be formed by the TNEB Ltd. to redress the Officers/employees grievances on such absorption, Separate committees shall be formed for officers (Class-I and II) and other Officers/employees (Class-III and IV). Such committees shall also have representation from TANTRANSCO and TANGEDCO. Any representation of the Unions on behalf of the aggrieved employee(s) shall be given due regard. If the Grievance Handling Committee found that a category / section of Officers/employees is / are adversely affected, such category / section of Officers/employees may be allowed to exercise one more option subject to administrative exigencies.

வாரியத்தால் ஏற்கனவே அளிக்கப்பட்ட முன்வரைவில் இருந்த 5 (16), தற்போது வாரியத்தில் வழங்கப்பட்டுள்ள முன்வரைவில் நீக்கப்பட்டுள்ளதை திரும்பவும் சேர்த்திட வேண்டும்.

மேலும், 20.10.2022ல் வாரியத்திலிருந்து அனுப்பப்பட்ட BP No. 2 dated 12.04.2022 யை முழுவதுமாக ரத்து செய்வதை பரிசீலிக்க முடியாதென 11.07.2023ல் தமிழ்நாடு அரசு எரிசக்தித் துறையிலிருந்து வந்துள்ள

உத்தரவும், 56,000 காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்து எந்த விதமான உத்தரவாதமும் மேற்கண்ட முன்வரைவில் குறிப்பிடப்படாததும்,

Redeployment and outsourceing முறைகளில் பதவிகளை ஒழிக்க மாட்டோம் என்று 26.09.2022 அன்று தொழிற்சங்கங்களிடம் வாரியம் எழுத்துப்பூர்வமாக ஒத்துக் கொண்டிருந்தும், தொடர்ச்சியாக பதவிகளை ஒழிக்கக் கூடிய உத்தரவுகள் உத்தரவிட்டு வருவதும், இதற்கு முன்னர் மின்சார வாரியத்தில் கையெழுத்தாகியுள்ள அனைத்து ஒப்பந்தங்களையும் நடைமுறைப்படுத்தக் கூடும் என பிற மாநில ஒப்பந்தங்களில் குறிப்பிட்டப்பட்டுள்ளதை போல் மேற்கண்ட முன்வரைவில் குறிப்பிடப்படாததும், மேலும், பார்வை (4)ல் கண்டுள்ளபடி முன்வரைவில் 02.02.2021ஆம் தேதியிட்ட கடிதத்தில் எங்கள் சங்கத்தால் கோரியிருந்த திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படாததும், தொழிலையும், தொழிலாளர்களையும் பெரும் பாதிப்புகளுக்குள்ளாக்கும் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம். எனவே, முத்தரப்பு ஒப்பந்தம் குறித்து ஒரு முழுமையான பேச்சு வார்த்தை நடத்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

## எனதருமை மகனே... மகளே...

**(படித்ததில் பிடித்ததை அனுப்பியது - தோழர் M. சுப்ரமணியம், மாநில உப தலைவர் TNEBEF)**

முதுமையால் தள்ளாடும் என்னிடத்தில் பொறுமையாயிருந்து... என்னைப் புரிந்து கொள்ள முயற்சி செய்!

நான் உணவருந்தும்போது அழுக்கானால்... சரியாக உடையணிய முடியாதிருந்தால்... பொறுமையாயிரு. உனக்கு நான் அவற்றை கற்றுத்தர செலவிட்ட பல மணி நேரங்களை நினைத்துப் பார்!

சொன்னதையே திரும்பத் திரும்ப ஆயிரத்தொருமுறை நான் சொன்னாலும் கவனித்துக் கேள். நீ சிறுபிள்ளையாயிருந்தபோது உனக்குத் தூக்கம் வரும் வரை ஒரே கதையை ஆயிரத்தொருமுறை திரும்பத் திரும்ப சொல்லியிருக்கிறேனே...

நான் குளிக்க விரும்பாதபோது என்னை வற்புறுத்தி அவமானப்படுத்தாதே... கடிந்து கொள்ளாதே... உன்னைக் குளிப்பாட்ட ஆயிரம் கற்பனை காரணங்களைச் சொல்லி உன் பின்னால் ஓடி வந்த நாட்களை நினை! நவீன தொழில்நுட்பங்களை பற்றிய எனது அறியாமையை ஏளனம் செய்யாதே. அவற்றைப் புரிந்து கொள்ள எனக்கு அவகாசம் கொடு. உணவருந்துதல், நன்றாக உடையணிதல், வாழ்க்கையை தைரியத்துடன் எதிர்நோக்குதல் போன்ற எத்தனையோ எளிய காரியங்களை உனக்கு நான் கற்றுத் தந்திருக்கிறேனே...

மறதி என்னை ஆட்கொள்ளும்போது சிடுசிடுக்காதே. ஏனெனில் என் உரையாடலைவிட நான் உன்னுடன் இருப்பதும், நீ என்னைக் கவனித்துக் கேட்பதுவுமே முக்கியம்! நான் சாப்பிட விரும்பாதபோது கட்டாயப்படுத்தாதே. எப்போது எனக்கு உணவு தேவை, எப்போது தேவையில்லை என்பதை நான் நன்கறிவேன்!

நீ முதலடிகளை எடுத்து வைத்தபோது நான் என் கரங்களை எனக்கு கொடுத்ததுபோல என் கால்கள் தளரும்போது உன் கரங்களால் என்னைத் தாங்கு... என்னிடம் பிழைகளிலிருந்தாலும் உனக்காக சிறந்ததையே நான் வாஞ்சித்தேன். மிகச் சிறந்ததையே முயற்சித்தேன் என்பதை ஒரு நாள் கண்டு கொள்வாய்!

நான் உனதருகில் வந்தால் சினமடைய வேண்டாம். என்னோருந்து என்னைப் புரிந்துகொண்டு எனக்கு உதவி செய்ய முயற்சி செய். நான் நடப்பதற்கு ஊன்றுகோலாயிரு. அன்பும் பொறுமையுடனும் என் பாதையை முடிக்க உதவியாயிரு. மனமலர்ந்து புன்னகையும் ஆழ்ந்த அன்புமே அதற்காக என்னிடம் நீ பெறும் கைமாறு வயதான அன்னையுடன் குமுறல்களை உணர்ந்து அவர்களை 20 ஆண்டுகளாக அரவணைக்கும் இறைப்பணியில்...

... ஒரு தாயின் குமுறல்

# அரசாணை - TNPGCL

**(ABSTRACT)**

Energy Department - Restructuring of Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) into separate generation and distribution companies - Formation of Thermal Generation Company in the name of Tamil Nadu Power Generation Corporation Limited (TNPGCL) under the Companies Act, 2013 - Approval accorded - Orders - Issued.

---

**ENERGY (B2) DEPARTMENT**

**G.O (Ms.) No. 6**

**Dated : 24.01.2024**
சோபகிருது வருடம், தை 10
திருவள்ளுவர் ஆண்டு 2055

**Read:**

From the Additional Chief Secretary / Chairman and Managing Director, Tamil Nadu Generation & Distribution Corporation Limited, Letter No. 018522/CFC/G1/FC/G1/Restructuring/2023-1, Dated 03.01.2024.

*****

**ORDER:**

In the letter read above, Additional Chief Secretary / Chairman and Managing Director, Tamil Nadu Generation Distribution Corporation Limited has informed that Tamil Nadu has largely kept pace with the Power Sector Reforms in the country. While the key reforms such as corporatization of its power utilities and establishment of independent regulatory authority have been completed in entirety, the restructuring of state power sector remains only partially complete.

2) The Chairman and Managing Director has stated that in the year 2010, the transmission business was unbundled into a separate company & Tamil Nadu Transmission Corporation Limited (TANTRANSCO), but the generation and distribution business was retained in a single company viz., Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO). Accordingly, he has now proposed to complete the restructuring process in Tamil Nadu as well by unbundling TANGEDCO into separate generation and distribution companies.

**(1) Need for Restructuring:**

The need to complete the restructuring process in Tamil Nadu by unbundling of TANGEDCO is further emphasized by the following::-

**a) Unbundling is complete in most of the States**

As evident in Table 1, nearly all the major States have already aligned the business structure with the power sector value chain by having separate companies in the area of Generation, Transmission and Distribution.

| Table 1: State Wise Industry Structure and Chronology | | | |
|---|---|---|---|
| **S.No.** | **State** | **Year of Restructuring** | **Industry Structure** |
| 1 | Odisha | 1996 | 2G+T+4D |
| 2 | Haryana | 1998 | G+T+2D |
| 3 | Rajasthan | 2000 | G+T+3D |
| 4 | Uttar Pradesh | 2000 | 2G+T+5D |
| 5 | Karnataka | 2002 | G+T+5D |
| 6 | Uttarakhand | 2004 | G+T+D |
| 7 | Gujarat | 2005 | G+T+D4 |
| 8 | Madhya Pradesh | 2005 | G2+T+D3 |
| 9 | Maharashtra | 2005 | G+T+D |
| 10 | West Bengal | 2007 | G+T+D |
| 11 | Chhattisgarh | 2009 | G+T+D |
| 12 | Assam | 2009 | G+T+D |
| 13 | Tamil Nadu | 2010 | GD+T |
| 14 | Himachal Pradesh | 2010 | G+T+D |
